**அ.வ.எண். 247/2022**
**வா.சா.1 : லட்சுமி**
**தேதி : 12.01.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

உங்கள் கணவர் 1997 லிருந்த உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பி.எஸ்சி பட்டப்படிப்பு படித்துள்ளார். பிரதிவாதி 12 ஆம் வகுப்பு தான் படித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரது தகப்பனார் தொழிலை செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் வாதி திருமணமாகி கணவரை விட்டு பிரிந்து 3 ஆண்டுகளில் உங்கள் வீட்டில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். 3ம் வாதி 2 திருமணம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல அவர் ஒரு திருமணம் மட்டும் தான் செய்துள்ளார். 4ம் வாதி இன்ஜினியரிங் படித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 4ம் வாதியை பிரதிவாதிதான் படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் சந்திரா என்பவரை முதலில் திருமணம் செய்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு ஹேமலதா என்று பெண் குழந்தை பிறந்து இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல பொய். ராஜா என்பவர் உங்கள் கணவருக்கும் சந்திரா என்பவருக்கும் பிறந்தவர் என்று சொன்னால் சரியல்ல. அவர் சசிக்குமாருக்கும் சந்திரா என்பவருக்கும் பிறந்தவர் தான் ராஜா. சந்திரா என் உடன் பிறந்த மூத்த சகோதரி. சந்திராவைத்தான் உங்கள் கணவர் திருமணம் செய்திருந்தார் என்றும் உங்கள் கணவருக்கும் சந்திராவிற்கும் விவாகரத்து ஆகாமலேயே உங்களை திருமணம் செய்து கொண்டதால் உங்கள் திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவருக்கு ஆன திருமனத்தை பற்றி நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று

சொன்னால் சரியல்ல. உயில் என் கணவர் யாரோ ஒரு வக்கீலிடம் எழுதி வருவதாகத்தான் கூறினார். என் கணவர் என்னிடம் உயில் எழுதுவதைப்பற்றி கூறிவிட்டு உயில் எழுத சென்றிருந்தார். உயிலை 6.12.2021 ல் எழுதி இருந்தார். அந்த உயில் எழுதிய பிறகு எத்தனை நாட்கள் கழித்து இருந்தார் என்றால் 28.12.2021 அன்று இறந்துவிட்டார். 31.01.2022 அன்று நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். என் கணவர் உயிலை எழுதிய பிறகு அவர் இறந்த பிறகு தான் இந்த உயில் நடைமுறைக்கு வரும் என்று சொன்னார் அதனால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். உயில் எழுதி வைக்கும் போது உங்கள் கணவர் நன்றாக இல்லை என்று சொன்னால் சரியல்ல அவர் இறக்கும் வரை நன்றாக இருந்தார். உயில் எழுதிவைப்பதற்கு முன்பாக இருதயஅடைப்பு ஏற்பட்டதால் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது பிரதிவாதி என் கணவரை பார்க்கவும் வரவில்லை. மேலும் பிரதிவாதி திருமணமாகி தனியாக சென்ற பிறகு எனக்கும் என் கணவருக்கும் எதுவுமே செய்யவில்லை. உயில் ஆவணம் பிரதிவாதியின் பங்கை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. உயிலை நிரூபிக்க நீங்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.12 20:00:36 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.